**கவனிக்க.**- *2008.03.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (II *அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1543 - 2008 මාර්තු 28 වැනි සිකුරාදා - 2008.03.28

*1543 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 300 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 302 |


**கவனிக்க.**- (i) *ஸ்ரீ சுமங்கல சரண சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2008, பெப்புருவரி 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *கடல்சார் கீழ்ப்புத்தடை சட்டமூலம் 2008, பெப்புருவரி 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *இலங்கை மின்சாரம் சட்டமூலம் 2008, பெப்புருவரி 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**கவனிக்க.**- *இவ்வர்த்தமானியின் பகுதி* V *இல், 2003, ஒற்றோபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டதான புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஏப்பிறல் 04 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, மாச்சு 19 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்களுக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2008, மாச்சு 11.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. அம்பாறை | அட்டாளைச்சேனை | அட்டாளைச்சேனை 2 பிரிவின், முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , அம்பாறை. |
| 2. அம்பாறை | அம்பாறை | அம்பாறை நகர பிரிவின், முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , அம்பாறை. |
| 3. அம்பாறை | சம்மாந்துறை | மபிடிபுர கிராம பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , அம்பாறை. |

3-809

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2008, மாச்சு 11.

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. அம்பாறை | சம்மாந்துறை | சம்மாந்துறை கிழக்கு பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , அம்பாறை. |
| 2. அம்பாறை | சம்மாந்துறை | சம்மாந்துறை தெற்கு பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , அம்பாறை. |

3-810

திருத்தம்

**பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் (விசேட அதிரடிப்படை)

மேற்போந்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக 2007.12.28 ஆந் திகதிய 1530 ஆம் இலங்கங்கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தல் தொடர்பானது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி ஆகிய 2008.03.28 ஆந் திகதியிலிருந்து மேலும் மூன்று மாதங்கள் 2008.06.28 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

பொலிஸ் மா அதிபர்.

3-826

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கை புகையிரத திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக் கொள்ளல்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அவசிய தராதரங்களை கொண்ட இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. புகையிரத பாதுகாவலர் பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பதாரிகள் இலங்கை தொழில்நுட்ப சேவை சபையின் மேற்பார்வையின் கீழ் பரீட்சை திணைக்களத் தினால் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் : 15/90க்கு இணங்க நடாத்தப்படும். திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்ற இடமளித்து அப்பரீட்சையில் வெளிக்காட்டும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி, நிலையம், நேரம் போன்றவை நாளடைவில் விண்ணப்பதாரிகளுக்கு அறியத்தரப்படும்.

2. **விண்ணப்பிக்கும் முறை**.- விண்ணப்பப்பத்திரத்தை இவ்வறிவித்தலின் கடைசியில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பத்திற் கிணங்க ஏ4 அளவுள்ள கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரியினாலேயே தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். இலக்கம் 01 இலிருந்து 08 வரை முன் பக்கமும் இலக்கம் 09 இலிருந்து ஏனையவை மறு பக்கத்திலும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(i) அரசாங்க/ கூட்டுத்தாபன/ மாகாண அரசாங்க சேவையி லுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்பத்திரத்தை தாம் கடமை புரியும் நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும்போது விண்ணப்பப் பத்திரத்திலுள்ள காரணிகள் உண்மையானதெனவும், தேர்ந்தெடுக்கப்படு மிடத்து தமது சேவையிலிருந்து விலக்கழிக்க முடியும் எனவும் நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2008.05.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்க கூடியவாறு "புகையிரத முகாமையாளர், புகையிரத முகாமையாளர் அலுவலகம், கொழும்பு - 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம்" என குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் எல்லா வகையிலும் பூரணமானதகாவும் சரியானதுமாக இருத்தல் வேண்டும்.

(iii) காலம் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்களும் வர்த்தமானி அறிவித்தலுக்கு இனங்காத விண்ணப்பப்பத் திரங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரமோ அல்லது அதனோடு சம்பந்தமான ஏதேனும் சான்றிதழோ கடிதமோ காணாமல் போனது பற்றி விடுக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- புகையிரத பாதுகாவலர் பயிற்சித் தரம் அ. நி. சு. 06/ 2006 (11) இன்படி முதலாம் வருடம் மாதமொன்றுக்கு ரூபா 12,920.00 உம் இரண்டாம் வருடம் ரூபா 13,040.00 உம் வழங்கப்படும்.

புகையிரத பாதுகாவலர் தரம் II ஆந் தரத்திற்கு.- ரூபா : 14,140- 10X140- 11X150- 6X210- 14X290- ரூபா 22510 ஆகும்.

4. **கல்வி மற்றும் வேறு தகைமைகள் :**

(I) தூய கணிதம் அல்லது பிரயோக கணிதம்/ பௌதிகவியல் விஞ்ஞானம் போன்ற இரு விடயங்களுடன் விஞ்ஞான விடயம் மூன்றுடன் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தலுடன் மொழி அல்லது இலக்கியம், எண் கணிதம்/கணிதம்/விஞ்ஞானப் பாடத்துடன் இன்னுமோர் விடயத்தில் திறமை சித்தியுடன் ஆறு விடயங்களில் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருத்தல்.

(1I) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(1II) விண்ணப்பதாரி நற்குணமும் நல்ல தேகாரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(1V) விண்ணப்பதாரிகளின் குறைந்த உயரம் ஐந்து அடி (05’) நான்கு அங்குலமாக (04’’) இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று விண்ணப்பதாரியின் வயது வருடம் 18க்கு குறையாமலும்

45க்கு கூடாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை.**- (அ) மேலுள்ள 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை உடைய விண்ணப்பதாரிகள் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 15/90 க்கு இணங்க நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையின் ஒவ்வொரு விடயங்களிலும் குறைந்தது 40% புள்ளிகளை அல்லது அதற்கு கூடுதலாக பெற்றுக்கொண்டவர்களின் திறமையின் அடிப்படையில் அவசியமானளவு விண்ணபதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தராதரங்கள் பரீசீலனை செய்யப்படும்.

(இந்த நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.) அவசிய தராதரங்களை பூரணப்படுத்தியவர்களின் மத்திய கூடிய புள்ளிகளை பெற்றுக்கொண்ட ஒழுங்கின்படி வெற்றிடம் நிலவும் அளவுற்கேற்ப மாத்திரம் பாதுகாவலர்கள் பயிற்சி தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(ஆ) போட்டிப் பரீட்சையின் பரீட்சை திட்டமும், உள்ளடக்கமும் கீழ்க்காட்டப்பட்டவாறு அமையும்:-

(1) பரீட்சை சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும்;

(2) விண்ணப்பதாரி பரீட்சைக்கு ஒரே மொழியிலேயே தோற்ற வேண்டும்;

(3) இந்த பரீட்சைக்குரிய வினாத் தாள்களின் எண்ணிக்கை இரண்டாகும் :-

(1) புத்தி பரீட்சை- காலம் 01 மணி- மொத்த புள்ளி 100 ஆகும்.

(1I) தொழில்நுட்ப விடயம் - காலம் 03 மணி - மொத்த புள்ளி 100 ஆகும்.

விடய உள்ளடக்கம் :

(I) *புத்தி பரீட்சை வினாத்தாள்.*- விண்ணப்ப தாரியின் எண்ணும் தர்க்க ரீதியான தன்மையையும், மாறுபட்ட பகுப்பாய்வின் தன்மையையும், தீர்மானிக்கும் சக்தியையும் அளவிடும் வகையில் வினாக்களை உள்ளடக் கியதாக அமையும்.

(II) *தொழில்நுட்பம் பற்றிய வினாத்தாள்.*- க. பொ. த (உ. தர) மட்டத்தில் தூய கணிதம், பிரயோக கணிதம்/பௌதியவியல் விஞ்ஞானம் போன்ற விடயங்களின் அறிவை பரீட்சிக்கும் முறையில் அமைந்த வினாக்களுக்கு பதில ளிக்க வேண்டிய வகையில் அமைந்த வினாத்தாளாகும்.

ஒவ்வொரு விடயத்திலும் சித்தியடைவதற்காக வேண்டிய 40 புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் புள்ளிகளை பெற வேண்டும். பரீட்சையில் சித்தியடைந்ததாக கருதுவதற்கு இரு பாடங்களிலும் சித்தியடைந் திருத்தல் வேண்டும். இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

6. **சேவையில் ஈடுபடுத்தப்படும் நிபந்தனைகள்.**- (i) திறந்த போட்டிப் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பயிற்சி தரத்திற்கு உட்படுத்தப்படுவதுடன் சேவையின் தரத்திற்கு சேர்த்துக்கொள்ள முன்னர் சேவையுடன் சம்பந்தப்பட்ட இரு வருட அறிமுறை மற்றும் தொழில்சார் பயிற்சியையும் அதன் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையிலும் சித்தியடைந்ததன் பின்பு இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் 1I 'ஆ' தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையது மாகும். நியமிக்கப்படுபவர்கள் விதவைகள் அநாதைகள், ஓய்வூதிய திட்டத்திற்கு உதவித் தொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தாபனக்கோவை, நிதிப்பிரமாணம், திணைக்கள கட்டளைச் சட்ட திட்டங்கள், அரசினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள மற்றும் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் கீழ் படிதல் வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட விசேட கண் பரிசோதனையில் சித்தியடைவதற்கு கீழ்ப்பட்டவறாகும்.

(v) தாபன விதிக் கோவையின் II ஆவது பிரிவின் 10 இலிருந்து 12 வரையான பந்திகளில் காணப்படும் பிரிவுகளும் இதற்கு ஏற்புடையதாகும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்காக வேண்டி திரும்ப கொடுக்கப்படாத ரூபா 250.00 ஆன கட்டணம் அறவிடப்படும். அது கொடுக்கப்படும் அலுவலகம் மருதானை தபால் அலுவலகம் (01000) எனக் குறிப்பிட்டு கொழும்பு 10, புகையிரத பொது முகாமையாளருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையை தபால் காரியாலயத்தில் பெற்றுக் கொண்டு அதை விண்ணபத்திரத்துடன் இணைத்து அனுப்பல் வேண்டும். உண்மைப் பிரதியை தவிர புகைப்பட பிரதியை இணைக்கக் கூடாது.

8. **விண்ணபதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- விண்ணப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர், அல்லது சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படைகளின் உத்தியோகத்தர்கள் அல்லது அரசாங்க/கூட்டுத்தாபன/மாகாண அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள், அதிகாரம் பெற்ற அதிகாரி அல்லது நிரந்தர பதவியை வகிக்கும் அரசாங்க, மாகாண அரச சேவை உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2008.05.02 ஆந் திகதியாகும்.

லலிதசிறி குனருவன்,
புகையிரத முகாமையாளர்.

புகையிரத முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பத்திற்குரிய நிருவாக மாவட்டம் :- ☐

2. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களம்/ தமிழ்) :----.

முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கிலத் தில்) :----.

3. (அ) நிரந்தர வதிவிட முகவரி (சிங்களம்/தமிழ்) :----.

நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கிலத்தில்) :----.

(ஆ) பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களம் அல்லது தமிழில் குறிப்பிட்டு ஆங்கிலத்திலும் குறிப்பிடவும்.) :----.

4. (i) பிறந்த திகதி :-
ஆண்டு:----. மாதம் :----. திகதி :-----.

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி தினத்தன்று வயது :-
வருடங்கள்:----. மாதங்கள் :----. நாட்கள் :-----.

(iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

5. நீர் இலங்கை பிரஜையாக கருதப்படுவது எவ்வாறு என்பது பற்றி (சரியான பதிலுக்கு நேரே ✓ அடையாளமிடவும்) :-

| | |
|---|---|
| பதிவு மூலம் | |
| பரம்பரை மூலம் | |

6. நீர் உள்ளடக்கப்படும் இனத் தொகுதி (அடைப்புக்குள் இனத் தொகுதியையும் குறியீட்டு இலக்கத்தையும் குறிப்பிடவும்.) :-

| இனத் தொகுதி | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| சிங்களம் | 1 |
| இலங்கை தமிழ் | 2 |
| முஸ்லிம் | 3 |
| இந்திய தமிழ் | 4 |
| பறங்கியர் | 5 |
| மலாயர் | 6 |
| வேறு | 7 |

| இனத்தொகுதி | குறியீட்டு இல. |
|---|---|
| | |

7. நீர் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் (சரியான பதிலுக்கு நேரே அடையாளமிடவும்.) :-

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

8. கல்வித் தராதரம் :-

1. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை
ஆண்டு :----. சுட்டெண் :----.
மொழி மூலம் :----.

முதல் தடவை :

| பாடம் | தராதரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |
| 11. | |

2. க.பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை
ஆண்டு:----. சுட்டெண் :----.
மொழி மூலம் :-----.

இரண்டாம் தடவை :

| பாடம் | தராதரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |
| 11. | |

9. நீர் நீதிமன்றத்தின் மூலம் ஏதாவது குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ளீரா? (சரியான பதிலுக்கு நேரே✓அடையாளமிடவும்.):-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

குற்றவாளியாக கருதப்பட்டிருந்தால் அது சம்பந்தமான விவரம் குறிப்பிடவும்.

(திகதி, வழக்கு இலக்கம், குற்றம், தண்டனையின் தன்மை போன்றவற்றை குறிப்பிடவும்.)

10. உயரம் (பாத அணி இல்லாமல்) : அடி----. அங்குலம் :----.

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதெனவும், சரியானதெனவும் அத் தகவல்கள் யாவும் பொய்யானதென அல்லது பிழையானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு காணப்படுமிடத்து நான் தகுதியற்றவராக கருதப்படுவதற்கும் நியமித்ததன் பின்பு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன். ரூபா 250 ஐ-------- தபால் காரியாலயத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட இலக்கம் ---- ஐ உடைய காசுக் கட்டளையை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

...............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல் :-**

இவ்விண்ணப்பத்தை முன் வைக்கும்................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் இன்று என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-----.
பதவி :-
விலாசம் :----.
திகதி :----.
(இறப்பர் இலட்சினையை பொறிக்கவும்).

13. **திணைக்கள அல்லது கூட்டுத்தாபன தலைவரின் சிபாரிசு :**

............................. அவர்கள் இந்த திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில் சேவையிலிருப்பதாகவும், இவரின் வேலை, நடத்தை திருப்திகரமானது எனவும், அவருக்கு எதிராக ஒழுக் காற்று நடவடிக்கை ஏதும் இல்லையெனவும் இப்பதவிக்குரிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி இப்பதவிக்கு விண்ணபிக்க தேவையான தராதரங்களை பூரணப்படுத்தி உள்ளதாகவும், அவர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுமிடதது சேவையிலிருந்து விலக்களிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

.........................................
திணைக்கள/கூட்டுத்தாபன
தலைவரின் அதிகாரம் பெற்ற
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :-
பதவி :-
விலாசம் :-
திகதி :-
(இறப்பர் இலட்சினையை பொறிக்கவும்)

3- 783

---

## சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு

### பெருந்தோட்டப் பகுதிகளில் சுகாதார சேவைகளை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களைப் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2008

பெருந்தோட்டப் பகுதிகளில் நோய்த்தடுப்பு மற்றும் நோய் நிவாரண சுகாதார சேவையினை மாகாண சுகாதார சேவையினுள் கொண்டுவந்ததைத் தொடர்ந்து பெருந்தோட்டப் பகுதியில் சுகாதார சேவையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக பின்வரும் பதவிகளுக்குப் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு சுகாதார மற்றும் போசணை அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. **கல்வித் தகைமைகள்.-** கீழ் குறிப்பிட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகள் தமிழ் மொழி மூலத்தில் இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

கோரப்பட்டுள்ள க. பொ. த. (சாதாரண தரம்) தகைமைகளோடு 2007 ஆம் ஆண்டு பெறுபேறு உட்பட அதற்கு முற்பட்ட ஆண்டுகளிலும் க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்றவர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்களாகவர். (ஏற்கனவே 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதிய (வெள்ளிக்கிழமை) 1525 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

வர்த்தமானப் பத்திரிகை பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைய மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்காதவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம். (விண்ணப்பம் அனுப்பிய ஏனைய எவரும் மீண்டும் இவ்விளம்பரம் தொடர்பில் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டியதில்லை.)

| பதவிகள் | க. பொ. த. (உ. த.) தகைமைகள் | க. பொ. த. (சா. த.) தகைமைகள் |
|---|---|---|
| மருந்துக் கலவையியலாளர் | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயன வியலில் திறமைச் சித்தியுட்பட 3 விஞ்ஞான பாடங்களில் சித்தி | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், விஞ்ஞானம், தாய் மொழி உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்திகள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |
| பொது சுகாதார பரிசோதகர் (ஆண்கள் மட்டும்) | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியலில் திறமைச் சித்தியுட்பட 3 விஞ்ஞான பாடங்களில் சித்தி | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்திகளுடன் ஆங்கில மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |
| குடும்பநல சேவை உத்தியோகத்தர் (பெண்கள் மட்டும்) | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவது 3 பாடங்களில் சித்தி | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |

2. ஆள்பணிக்கு அமர்த்தப்படவுள்ள சுகாதார நிறுவனத்தின் பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்படும். மருந்துக் கலவையாளர் மாவட்ட ரீதியில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(i) மருந்துக் கலவையாளருக்கான ஆட்சேர்த்தல் :

பதுளை மாவட்டம் :- ஹப்புத்தளை 02/ வெலிமடை 03/ லுனுகல 01/ பண்டாரவளை 02/ பதுளை 02/ ஹாலிஎல 01/ ஊவாபரனகமை 01/பஸ்சரை 01

இரத்தினபுரி மாவட்டம் :- அயாகமை 01/ பலாங்கொடை 01/ கஹாவத்தை 02/ கொடக்காவெல்லை 01/ கொலன்னே 01/ ஒப்பநாயக்க 01/ நிவித்திக்கலை 01/ இரத்தினபுரி 01

கேகாலை மாவட்டம் :- தெரனியகலை 02/தேகியோவிற்றை 02/ அறநாயக்க 02/ எட்டியாந்தோட்டை 03

களுத்துறை மாவட்டம் :- புளத்சிங்கள 02/மிலேனியை 01/பண்டாரகமை 01

காலி மாவட்டம் :- இயக்கமுல்லை 01

நுவரஎலியா மாவட்டம் :- வலப்பனை 03/கொத்மலை 01/ஹங்குறன்கத்தை 01/நுவரஎலிய 01

மாத்தளை மாவட்டம் :- இரத்தோட்டை 01

கண்டி மாவட்டம் :- நாவலப்பிட்டி 01

(ii) பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான ஆட்சேர்ப்பு :-

நுவரஎலியா மாவட்டம் :- வலப்பனை 04/ அம்பகமுவ 12/ஹங்குறன்கத்தை 01/கொத்மலை 04/நுவரஎலிய 16

கண்டி மாவட்டம் :- மடதும்பறை 01/ பாஸ்பாகேகோறலை 02/ பன்வில்லை உடபலாத்தை 02/ கங்காவத்தை கோறலை 01/ கங்கயிகலை 01/ கலகா 01/ உடபலாத்தை 01

மாத்தளை மாவட்டம் :- மாத்தளை 01/ உக்குவெல்லை 01/இரத்தோட்டை 01/ பல்லிபெல்லை 01

பதுளை மாவட்டம் :- பதுளை 01/பண்டாரவளை 01/எல்ல 01/ஹாலிஎல 02/ஹப்புத்தளை 02/ஹல்துமுல்லை 01/மீகஹகிவுலை 01/பஸ்ஸறை 02/ ஊவாபரனகமை 01/வெலிமடை 01

மொனறாகலை மாவட்டம் :- படல்கும்பறை 01/பிபிலை 01/மொனறாகலை 01

*இரத்தினபுரி மாவட்டம்:-* நிவித்திகலை 01/ இரத்தினபுரி 03/ இம்புல்வை 01/ பலாங்கொடை 01/ கொடக்காவெலை 01/ கஹாவத்தை 03/குருவிற்றை 01

*கேகாலை மாவட்டம் :-* எட்டியாந்தோட்டை 01/தெகியோவிற்ற 01/புளத்கோகுப்பிட்டி 01/தெரனியகலை 01

*களுத்துறை மாவட்டம் :-* அகலவத்தை 01/புளத்சிங்கள 01/மத்துக்கமை 01/ஹொரணை 01

*காலி மாவட்டம் :-* நாகொடை 01

*மாத்தறை மாவட்டம் :-* கொட்டப்பொலை 01

(iii) *குடும்ப நலசேவை உத்தியோகத்தருக்கான ஆட்சேர்ப்பு :-*

*நுவரஎலியா மாவட்டம் :-* வலப்பனை 07/அம்பகமுவ 40/அங்குறன்கத்தை 02/கொத்மலை 09/நுவரஎலிய 35

*கண்டி மாவட்டம் :-* மடதும்பறை 03/பாத்தஹேவாகற்றை 01/உடதும்பறை 01/பஸ்பாகேகோறலை 05/பன்வில்லை உடபலாத்தை 01/கங்கவத்தை கோறலை 01/உடநுவரை 01/கலகா 04/உடபலாத்தை 05/இயட்டி நுவரை 01

*மாத்தளை மாவட்டம் :-* மாத்தளை 02/உக்குவெல்லை 03/இரத்தோட்டை 01/பல்லிபெல்லை 02/அம்பன்கங்கை 02/கலேவலை 01

*பதுளை மாவட்டம் :-* எல்லை 02/ ஹாலிஎல 06/ ஹப்புத்தளை 01/ ஹளுதுமுல்லை 01/ மீகஹகிவுலை 02/ பஸ்சறை 06/ ஊவாபரனகமை 05/வெலிமடை 02

*மொனறாகலை மாவட்டம் :-* படல்கும்பறை 03/பிபிலை 03/மொனறாகலை 05

*இரத்தினபுரி மாவட்டம் :-* எலப்பத்தை 01/கலவாணை 01/இரத்தினபுரி 02/கொலொனை 01/இம்புல்பை 03/பலாங்கொடை 03/கொடக்காவெலை 01/கஹாவத்தை 03

*கேகாலை மாவட்டம் :-* கேகாலை 01/எட்டியாந்தோட்டை 03/தெகியோவிற்றை 04/வறக்காபொலை 01/புளத்கோகுப்பிட்டிய 03/தெரனியகலை 01

*கொழும்பு மாவட்டம் :-* பாதுக்கை 01/ஹன்வில்லை 01

*காலி மாவட்டம் :-* நாகொடை 03/கறந்தெனியை 01

*மாத்தறை மாவட்டம் :-* கொட்டப்பொலை 01

*குருநாகலை மாவட்டம் :-* பொல்காவலை 01/ரெய்டிகமை 02

**3. ஏனைய தகுதிகள் :**

(அ) 2008.04.21 ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(ஆ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உடன்படுபவராக இருக்க வேண்டும்.

(இ) உடல்வலுவுள்ளவராகவும் சுகதேகியாகவும் இருக்க வேண்டும்.

(ஈ) தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் மூன்றாண்டுகள் வதிந்திருந்தவராக இருக்க வேண்டும்.

(உ) குடும்பநல சேவையாளராகுவதற்கு விண்ணப்பிப்பவர்களின் உயரம் 4 அடி 10 அங்குலத்திற்கு மேற்பட்டு இருக்க வேண்டும்.

**4. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இவ்விளம்பரத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து அதில் முத்திரைக்கான கூட்டில் 200 ரூபா பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன் மேல் விண்ணப்பதாரர் கையொப்பமிட்டு முத்திரையை இரத்துச் செய்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/ கல்விச்சேவை/ அரச கணக்காளர் சேவை/ அரச பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 124,080 ரூபாவிற்குக் குறையாத அரசாங்க அதிகாரி யாராவது ஒருவரிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(இ) முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைப் பதிவுத்தபாலில் "பணிப்பாளர் (நிர்வாகம்) – 02, சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு, "சுவசிறிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2008.04.21 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்புவதுடன் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "பெருந்தோட்டப் பகுதியில் சுகாதார சேவை உத்தியோகங்களுக்காக பயிலுநர்களாக ஆட்சேர்த்துக்கொள்ளல்" எனக் குறிப்பிட வேண்டும்.

5. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

6. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

7. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் விண்ணப்பித்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் அவரின் நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்படும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ்.;

(ஆ) கல்விச் சான்றிதழ் மூலப்பிரதிகள், மூலப்பிரதிகள் இல்லாதவிடத்து வெளிவாரி பரீட்சார்த்திகளுக்கு பெறுபேற்று படிவங்கள் அல்லது பரீட்சை அமர்வு பாடசாலை அதிபரினால் விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி ;

(இ) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சை புள்ளிகள் குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ்.

(ஈ) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம் ;

(உ) 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளின் உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களின் பிரதிகள், விண்ணப்பதாரியின் பெயர், வாக்காளர் பட்டியலில் இல்லாதவிடத்தில் அவரது பெற்றோரின் பெயர்கள் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இத்தகையோர் வாக்காளர் பட்டியலுக்கு மேலதிகமாக கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. ***பயிற்சித்திட்டம் :***

(i) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நெறிகளுக்காக உரிய பயிற்சி பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள்;

(ii) பயிற்சிப் பாடசாலைகளின் சட்ட திட்டங்களையும் ஒழுங்குகளையும் கடைப்பிடிக்க வேண்டியதுடன் சுகாதார திணைக்களத்தினால் காலப்போக்கில் மேற்கொள்ளப்படும் சட்டதிட்ட திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது அவசியமாகும் ;

(iii) இப்பயிலுநர்களுக்கான பயிற்சிகளின்போது நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையாது அல்லது நடத்தை மற்றும் செயற்பாடுகள் திருப்தியற்ற அல்லது பரீட்சை விதிமுறைகளைப் பின்பற்றாது மற்றும் பயிற்சிக் காலப்பகுதியில் உரிய வகையில் சமுகமளிக்காது இருப்பின் எவ்வித முன்னறிவித்தலோ அல்லது நட்டஈடோ இன்றி எந்நேரத்திலும் இடைநிறுத்தப்படலாம் ;

(iv) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும்போது சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். அதாவது பயிலுநர் பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதுடன் சுகாதார திணைக்களச் சேவையில் நியமனம் வழங்கப்படின் 10 வருடங்கள் சேவையாற்ற முடியும். மேற்குறிப்பிடப்பட்ட (iii) இல் உள்ளவாறு பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது தொடர முடியாவிடின் பயிலுநர் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் மீளச்செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

10. **சேவைக்கு அமர்த்தும் விதிகள்**.- பயிற்சிநெறி முடிவில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களம் கட்டுப்படவில்லை. எவ்வாறாயினும் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெறும் பயிலுநர்களுக்கு குறித்த துறைகளுக்கான தரம் III க்கான நியமனங்கள் அவர்களது பெறுபேறுகளின் அடிப்படையில் நாட்டின் எப்பகுதியிலாயினும் வெற்றிடங்களைப் பொறுத்து இந்நியமனங்கள் வழங்கப்படும். முதலாவது நியமனம் கிடைக்கப்பெறும் இடத்தில் அவர்கள் 2 வருடங்கள் கட்டாய சேவையாற்ற வேண்டும்.

11. விண்ணப்பங்களை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாக நிரப்பவும். பயிற்சிகளின்போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின், பயிற்சியிலிருந்து இடைநிறுத்தவோ அல்லது விலக்குவதற்கோ மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் பெயரைச் சேர்க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

12. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் இலங்கையில் எப்பகுதியிலாயினும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் தகுதியை நிரூபிப்பதற்கான மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதயற்றவர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் விதிகள் மற்றும் சுகாதார சேவைத் திணைக்களத்தின் கொள்கைகளுக்கேற்பவும், நீதி மற்றும் ஏனைய அரச சட்டதிட்ட மாற்றங்களுக்கும் கீழ்ப்படிவாக செயற்பட வேண்டும்.

14. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார, பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

(கலாநிதி) அத்துல கஹந்த லியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு,
'சுவசிரிபாய',
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2008.03.13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு**

பெருந்தோட்டப் பகுதிகளில் சுகாதார சேவை உத்தியோகத்துக்காக
........................................................................................ பயிலுநராக ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2008

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆ) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(ii) மாவட்டம் :-----.
(iii) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா ? (ஆம்/இல்லை) :-----.
(iv) ஆம் எனின் எவ்வளவு காலம் ? :-----.

4. பிறந்த திகதி :-

ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

2008.04.21 ஆந் திகதி வயது :-

வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

5. பால் :-----.
(பொருத்தமான கூட்டில் "✓" குறிப்பிடுக)

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

6. உயரம் :-

அடி :-----. அங்குலம் :-----.

7. நீங்கள் இலங்கைப் பிரசையா ? :-
(பொருத்தமான கூட்டில் "✓" குறிப்பிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

9. விவாக நிலை :-----.

10. கல்வித் தகைமை :-----.

(அ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சை (விஞ்ஞான பிரிவு மட்டும்) (தயவு செய்து புள்ளி விபரங்களை இணைக்கவும்) :-----.

பரீட்சைக்கு தோற்றிய மாவட்டம் :-----.
ஆண்டு :-----.
சுட்டெண் :-----.
Z புள்ளி :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சை :-----.

முதலாவது அமர்வு :-
ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |
| 11. | |
| 12. | |

இரண்டாவது அமர்வு :-
ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |
| 11. | |
| 12. | |

11. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? :-
(பொருத்தமான கூட்டில் " ✓ " குறிப்பிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில் தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :-----.

12. (அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தேர்வுக்கு முன்னராயின் தகுதியற்றவனாவதற்கும், நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

| முத்திரை |
|---|

..............................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி :...............................................................................................................................
எனக்கு தனிப்பட்ட முறையில் பரிட்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2008,........................
ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

...........................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
அலுவலக முத்திரையுடன்.

உறுதிப்படுத்துபவரின் விபரம் :
முழுப் பெயர் :-----.
தொழில் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

3-880

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.